செ.வெ.எண்:26/2018 நாள்:14.05.2018

சிவகங்கை மாவட்டம்

**மக்கள் குறை தீர்க்கும் நாள் நிகழ்ச்சியில் பொதுமக்களிடம் மனுக்கள் பெற்று கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை மூலம் மண்பாண்ட தொழிலாளர்கள் 39 நபர்களுக்கு ரூ7,34,400/- மதிப்பிட்டில் நவீன மின் விசை சக்கர இயந்திரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.!!!**




சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (14.05.2018) மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொது மக்களிடமிருந்து நேரடியாக மனுக்களைப் பெற்று, மனுக்கள் மீது தீர்வுகாணும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வேலைவாய்ப்பு, இலவச வீட்டுமனைப் பட்டா, விபத்து நிவாரணம் கோருதல், பசுமை வீடு கேட்டல், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை கோருதல், வங்கிக் கடன், மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் உபகரணங்கள் கேட்டல், குடும்ப அட்டை கோருதல், இலவச தையல் இயந்திரம் வழங்கக் கேட்டல், ஆக்கிரமிப்பு அகற்ற கேட்டல், பட்டா வழங்கக் கேட்டல், மின் இணைப்பு தொடர்பாக மனுக்கள், பயிர் காப்பீடு வழங்கக் கேட்டல் மனுக்கள் மற்றும் இதர மனுக்கள் போன்ற 224 கோரிக்கை மனுக்கள் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு சமூகவலைதளம், வாட்ஸப், குறுஞ்செய்தி வாயிலாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் குறைகள் மீது விரைவில் தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

பின்னர் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறையின் மூலம் சிவகங்கை மாவட்டத்தில் மண்பாண்ட தொழிலாளர்களுக்கு நவீன மின் விசை சக்கர இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பாண்டிற்கு 191 பயனாளிகள் தேர்வு

செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் **ரூ.20,400/-** மதிப்புள்ள மாறுபடும் வேகத்தில் இயங்கக்கூடிய நவீன தொழில் நுட்பத்துடன் இயங்கும் மின் விசை சக்கர இயந்திரம் வழங்க திட்டமிட்டு முதற்கட்டமாக 36 பயனாளிகளுக்கு **ரூ.7,34,400/-** மதிப்பீட்டில் இன்று மின் விசை சக்கர இயந்திரம் வழங்கப்பட்டதுடன் மண்பாண்டம் செய்யும் தொழிழலாளர்களுக்கு தேவையான மண் மற்றும் உபகரணப் பொருட்கள் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளும் வகையில் அந்தந்த வட்டாட்சியர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததுடன் இதுபோன்ற உபகரணங்களை கொண்டு மண்பாண்ட தொழிலில் நல்ல முன்னேற்றம் பெற்று பயன்பெற வேண்டுமென கேட்டுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியத் தொகைக்கான ஆணைகளையும், மாவட்ட ஆதிதிராவிட நலத்துறையின் மூலம் 2017-2018-ம் ஆண்டிற்கு சிறந்த இலக்கிய எழுத்தாளருக்கான பரிசுத் தொகை ரூ.20,000/-க்கான காசோலையினை எழுத்தாளர் முனைவர் மோகன் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ,ப.,அவர்கள் வழங்கினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு விளம்பர வாகனத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தமிழ்நாடு திறன்மேம்பாட்டு கழகத்தின் சார்பில் மாவட்டத்தில் அளிக்கப்படும் பல்வேறு திறன் பயிற்சி குறித்த வீடியோ படக்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வடிவேல், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை உதவி இயக்குநர் திரு.குமார், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்துறை ஆய்வாளர்கள் திரு.தேவராஜ், திரு.பொன்ராஜ், மாவட்ட சமூக பாதுகாப்புத் திட்ட தனிதுணை ஆட்சியர் திரு.விஜயன், மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் திரு.ரங்கராஜ் மற்றும் அனைத்துத்துறை அரசு உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**